Nallur Branch Library

வெளிநாட்டுப்
பிரயாணம்
திறமையான சேவைக்கும்,
நம்பிக்கைக்கும்,
செலவைக் குறைக்கவும்
MCT 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
Tele: 24781, 24886

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ௵ ஆடி ௴ 13 ௳ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 21 (29-07-1986) UTHAYAN 'A LIVELY TAMIL DAILY கதிர்: 216

ரெலிபோன்
ரெலக்ஸ்
24 மணி நேர சேவை
பாதுகாப்பான இடம்
Safe Vehicle Parking
MCT 1ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
Tele: 24791, 24886

● யாழ்நகர் ● காரைநகர் ● வயாவிளான்

குடாநாட்டில் படைகள் மீண்டும் வெளியேவர முயற்சி

தடுக்கும் பணியில் போராளிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள முகாம்களில் இருந்து வெளியே வருவதற்கு ஆயுதப் படையினர் மீண்டும் எத்தனம் புரிகின்றனர்.

நேற்று மட்டும் அவர்கள் மூன்று இடங்களில் வெளியேவர முயற்சி மேற்கொண்டனர்.

எனினும் போராளிகள் படையினரைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுத் தாக்குதல் நடத்தினர்.

யாழ்ப்பாணம் கோட்டை முகாம், காரைநகர் கடற்படை முகாம், வயாவிளான் இராணுவ முகாம் ஆகிய மூன்று இடங்களிலிருந்தே நேற்று வெளியே வர முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

யாழ்நகரில் கடந்த இரண்டு நாட்களில் மூன்று தடவைகள் ஆயுதப் படையினர் கோட்டை முகாமிலிருந்து வெளியே வர முயற்சித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலையும், மாலையிலும், நேற்று மாலையிலும் சிறு படையினர் வெளியே வர முயற்சி எடுத்தனர்.

நேற்று மாலை 4 30 மணியளவில், வெளியே வர முயற்சித்தவர்களை நோக்கிப் போராளிகள் நவீன ஆயுதங்கள், மோட்டார்ஷெல் போன்றவற்றினால் தாக்கினர். அதனால் அவர்கள் முகாமுக்குள் திரும்பினர்.

ஷெல்

அதனைத் தொடர்ந்து கோட்டை முகாமிலிருந்து ஆயுதப்படையினர் நகரை நோக்கி ஷெல் குண்டுகளை ஏவினர்.

மோட்டார் ஷெல்கள் மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ் பஸ்நிலையம், யாழ் ஆஸ்பத்திரிப்பக்கம் ஆகியவற்றில் விழுந்து வெடித்தன.

யாழ் ஆஸ்பத்திரிக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

29—07—1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10-33 முதல் 12-03 வரை
ராகுகாலம்:
3-03 முதல் 4-33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமி நள்பகல் 12 12 வரை

முஸ்லிம் கர்ப்பிணியை ஏற்றிச்சென்ற கார்மீது துப்பாக்கிச் சூடு!

கல்முனை, ஜூலை 29

முஸ்லிம் கர்ப்பிணித் தாய் ஒருத்தியை அவசரமாக ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்ற கார் மீது முஸ்லிம் ஊர்காவல்படையினர் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10-30 மணியளவில் சாய்ந்தமருதுக் கிராமத்தில் இடம் பெற்றது.

காரின் உரிமையாளரும் சாரதியுமான உதுமான்கண்டு ஆதம்பாவா நேற்று கல்முனைப் பொலீஸாருக்கு இது சம்பந்தமாக முறைப்பாடு செய்தார்.

காரில் போன முஸ்லிம் பெண்ணும் அவருக்கு உதவியாகச் சென்ற இன்னொரு முஸ்லிம் பெண்ணும் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தனர்.

சாய்ந்தமருது கூட்டுறவுச் சங்கச் சந்தியில் ஐந்து முஸ்லிம் ஊர்காவல் படையினர் இத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனராம்.

(இ-எ-84)

ஜனாதிபதிக்கு முறையீடு:

தமிழ்ச்சிறுவன் கைதான பின்னர் அதிகாரி வீட்டில் வேலை

கல்முனை, ஜூலை 29

அம்பாறை மாவட்டத்தில் மல்வத்தை என்னும் இடத்தில் வைத்து கடந்த ஜனவரி மாதம் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட 9 வயதுச் சிறுவன் மாதவன் கைதான பின்னர் இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறான்

இந்த விடயம் அண்மையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் கவனத்துக்கு நேரடியாகக் கொண்டு வரப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தூதுக்குழு, கொழும்பில் தங்கி நின்ற சமயம் இந்த விடயத்தை ஜனாதிபதிக்கு நேர்முகமாகத் தெரிவித்தது.

இச்சிறுவன், மல்வத்தை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராக இருந்த திரு. தங்கத்துரையின் மகன்.

இத்தகவலையும் கூட்டணித் தூதுக்குழு ஜனாதிபதிக்கு தெரிவித்தது.

இது பற்றி உடனடி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினர் திரு ஆ. வேல்முருகுவின் முறையீட்டைத் தொடர்ந்தே கூட்டணித் தூதுக்குழு இதனை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

(உ-எ-84)

வயாவிளானில் $2\frac{1}{2}$ மணிநேர மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வயாவிளான் இராணுவ முகாமிலிருந்து வெளியே வந்த ஆயுதப் படையினருக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படையினருக்கும் இடையில் சுமார் இரண்டரை மணி நேரம் மோதல் நிகழ்ந்தது.

இது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ், விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

டிரக் வண்டிகளிலும் நடை பவனியாகவும் நேற்று நூற்றுக்கு மேற்பட்ட அரசபடைகள் வெளியே வந்தன.

இவர்களை தொடர்ந்து முன்னேறாமல் தடுக்கும் முகமாக மக்கள் விடுதலைப் படையினர் எதிர்த் தாக்குதல் நடத்தினர்.

மக்கள் விடுதலைப் படையினர் கடுமையாக போரிட்டனர். மக்கள் விடுதலைப் படையின் மோட்டார் தாக்குதலில் அரச படைகள் சிலர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர்.

எதிர்ப்படைகள் பின்வாங்கினர். மக்கள் விடுதலைப் படை வீரர் ஒருவரும் இச்சமரில் காயமடைந்தார். (உ)

காரைநகரில் $1\frac{1}{2}$ மணிநேர மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

காரைநகர் கடற்படை முகாமை விட்டு நேற்று வெளியே வந்த கடற்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமார் ஒன்றரை மணி நேரம் கடும் மோதல் இடம்பெற்றது.

இந்தச்சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நேற்று நண்பகல் 12 மணியளவில் காரைநகர் கடற்படை முகாமை விட்டு இருநூறுக்கும் மேற்பட்ட கடற்படையினர் வெளியேறி நடை பவனியாக பஸ்டிப்போவுக்கு அண்மையில் வந்தனர்.

50 பேரளவில் டிப்போவுக்குள் புகுந்து பஸ் ஒன்றை கடத்த முயற்சித்தவேளை நாம் தாக்கியதில் டிப்போவை

(4 ஆம் பக்கம் பார்க்க)

10 இளைஞர்கள் விடுதலை

கல்முனை, ஜூலை 29

கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை மூன்றும் குறிச்சியில் பொலிஸ் கமாண்டோக்களினால் கைது செய்யப்பட்ட 15 தமிழ் இளைஞர்களில் 10 பேர் வரையில் விடுவிக்கப்பட்டனர்

(உ-எ-84)

மட்டக்களப்பில்

250 அன்னையர் பாதுகாப்புக்கோரி அரச அதிபரிடம் முறையீடு

மட்டக்களப்பு, ஜூலை 29

சுமார் 250 தமிழ் அன்னையர் நேற்று மட்டக்களப்பு அரச அதிபரைச் சந்தித்து தங்களுக்குப் பாதுகாப்பு வழங்கும்படி கண்ணீர் மல்க முறையிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தளவாய், குடியிருப்பு ஆகிய கிராமங்களில் வாழும் அன்னையரே, நேற்று முறையிட்டவர்களாவர்.

ஜூலை 10 ஆம் திகதி தொடக்கம் ஏறாவூர், கரடியனாறு முகாம்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

தீர்வு காணும்வரை அரசியல் கட்சிகள் மாநாடு தொடரும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்வரை அரசியல் கட்சிகள் மாநாடு தொடரும்.

எதிர்ப்புக்கள் மத்தியிலும் மாநாடு தொடர்ந்து நடைபெறும்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா களனியில் நடந்த ஜாதிக சேவக சங்கமய தொழிற்சங்கக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கை அரசுடன் சேர்ந்து இனப்பிரச்சினை முடிவிற்குத் தீர்வு காணுங்கள் என்று தமிழர் விடுதலைக்கூட்டணியினருக்கு இந்திய அரசு கூறிவிட்டது.

இப்படி ஜனாதிபதி மேலும் சொன்னார்.

(இ-எ)

முச்சந்திமுரளி



அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தப்படும் எண்ட நிலையிலைதான் அப்ப காரியம் நடக்கப்போகுதோ ..!

இனப்பிரச்சினை:

இந்திய அரசு இரண்டுகோணை நிர்ப்பந்தம்?

புதுடில்லி, ஜூலை 28

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இருகோண நிர்ப்பந்த அணுகுமுறை ஒன்றை இந்திய அரசு கடைப்பிடிக்கத் தொடங்கி இருப்பதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா, தான் நியாயமானது எனக்கருதும் தீர்வு ஒன்றுக்கு இலங்கை அரசையும் தமிழர் விடுதலை அமைப்புகளையும் இணங்கச் செய்யவே இந்த நிர்ப்பந்த ராஜதந்திர அணுகுமுறையைக் கடைப்பிடிக்கத் தொடங்கி உள்ளது - இப்படி விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசமீது ராஜதந்திர ரீதியிலான நெருக்குதலை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காகக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. டிக்ஸித்தை புதுடில்லி வருமாறு இந்திய அரசு அழைத்து உள்ளது.

இதனிடையில் சென்னையில் உள்ள தமிழர் விடுதலை அமைப்புக்கள் மீதும் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிப்பதில் இந்தியத் தரப்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்திகள் வந்து உள்ளன.

ஐந்து தமிழ் விடுதலை அமைப்புக்களின் சென்னை அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த தொலைபேசித் தொடர்புகள் இந்திய அரசு அதிகாரிகளினால் துண்டிக்கப்பட்டு விட்டன.

தமிழக உயர்மட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பிலிருந்து வந்த

ரயில் பிரயாணிகள் இடைநடுவில் முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நேற்றுக்காலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு ரயிலில் புறப்பட்ட நூற்றுக்கணக்கான பயணிகள் முல்லைத்தீவில் தங்கி நிற்கின்றனர்.

ரயில் நண்பகல் சுமார் 11-00 மணியளவில் வவுனியா வந்து சேர்ந்தது. அப்போது யாழ்ப்பாணம் வருவதற்கென்று ஒரு பஸ் மட்டுமே ரயில் நிலையத்தில் நின்றது. அது பெயில் பஸ். பிரயாணிகளை ஏற்ற முடியாது என்று தெரிவித்ததால் பிரயாணிகள் பஸ் நிலையத்துக்கு வந்தனர்.

அங்கும் யாழ்ப்பாணத்துக்கு நேரடியாகச் செல்ல பஸ் ஏதும் கிடைக்காததால் முல்லைத்தீவு பஸ்ஸில் ஏறினர். முல்லைத்தீவு வந்தவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு வழியின்றி அங்கேயே நிற்பதாகத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆனைக்கோட்டை, கோண்டாவிலில்

150க்கு மேற்பட்ட வீடுகளில் சட்டவிரோத மின்இணைப்பு துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

சட்டவிரோதமாக மின்சார இணைப்புப் பெற்ற சுமார் 150க்கு மேற்பட்ட வீடுகளை மின்சார சபை அதிகாரிகள் குழு நேற்று முற்றுகையிட்டது.

இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதுடன் அவற்றுக்குப் பாவிக்கப்பட்ட வயர்கள் அந்த அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டு மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்கப்பட்டன.

மின் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் சென்ற குழு ஒன்றே இச்செயலில் ஈடுபட்டது.

ஆனைக்கோட்டை, கேணியடிவேலர், ஆலமடம், டம்பரோட், பாடசாலை ஒழுங்கை, மயிலுவேலர் ஆகிய பகுதிகளிலும் கோண்டாவில், அன்னங்கை, காரைக்கால், குமரகோட்டம் ஆகிய பகுதிகளிலுமே இந்த சட்டவிரோத மின் துண்டிப்பு இடம்பெற்றது.

சட்டவிரோதச் செயலால் வடபகுதியில் உள்ள டிரான்ஸ்போமர்கள் பளு தாங்கமுடியாமல் எரிந்து போகின்றன. பல லட்சம் ரூபா இதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மாற்று உபபொருட்கள் கிடைக்காமையினால் இரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் மொழிப் பிராந்திய யோசனை வந்தால் எதிர்ப்போம்

-- பேர்னாட் சொய்சா

கொழும்பு, ஜூலை 29

தமிழ்மொழிப் பிராந்திய யோசனை முன்வைக்கப்பட்டால் நாம் அதை எதிர்ப்போம்; அரசியல் கட்சிகள் மாநாட்டிலிருந்து வெளியேறுவோம்.

இப்படி லங்கா சமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. பேர்னாட் சொய்ஸா தெரிவித்தார்.

வெளிநாட்டுச் செய்திஸ்தாபனம் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

தமிழ் மொழிப் பிராந்திய யோசனை முன்வைக்கப்படும் சாத்தியம் உண்டா? என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு. பேர்னாட் சொய்சா இப்படிச் சொன்னார்.

மாகாணசபைக்காக அரசமைப்பு மாற்றமா? மக்கள் அங்கீகாரம்

பெறவேண்டும்; இல்லையேல் நெருக்கடி

சிறிமாவோ எச்சரிக்கை

கொழும்பு ஜூலை 29

மாகாணசபைகளை உருவாக்கி அதிகாரங்களைப் பரவல் செய்வதற்காக அரசமைப்புச்சட்டத்தில் செய்யப்போகும் பெரிய மாற்றம் மக்களின் அங்கீகாரத்துடன் செய்யப்படவேண்டும். இல்லாவிடில் நாடு நெருக்கடிக்கு ஆளாகும்.

இப்படி எச்சரித்தார் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

மாகாண சபைகளை எதிர்த்து பிரசாரக் கூட்டங்களை நாடு எங்கும் நடத்த சுதந்திரக்கட்சி முடிவு செய்துள்ளது.

அதற்கு இணங்க முதலாவது கூட்டம் பண்டாரகமையில் நடைபெற்றது.

அக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் திருமதி பண்டாரநாயக்கா முன்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் மட்டுமல்ல ஏனைய மாகாண மக்களும் பயத்துடன் தான் வாழ்கின்றனர்.

74 சத வீதமான மக்கள்பேசும் சிங்களமொழியுடன் தமிழும் அரசகரும மொழியாக இருப்பது நியாயமானது.

பலமொழிகள் உள்ள இந்தியாவில் ஹிந்தி தான் உத்தியோகமொழியாக உள்ளது.

இப்படி அவர் சொன்னார்.

(இ-எ)

இளைய தலைமுறையின் [illegible] வரும் இன்றைய நாளிதழ்

பெரும்போக செய்கைக்கு வசதியாக

எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி திட்டமிடல் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சி மாவட்டத்தில் அடுத்த பெரும்போக செய்கையின் போது ஏற்படவிருக்கும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பசளை, மருந்து தட்டுப்பாடு நிலவாதிருக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

—இவ்வாறு கோரும் தீர்மானங்கள் கடந்த 24 ம் திகதி கண்டாவளையிலுள்ள கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற பெரும்போக திட்டமிடல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கிளிநொச்சி கச்சேரி தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கே. குணராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இரணைமடு திட்ட முகாமையாளர் திரு வி. கதிரவேலு, விவசாய உதவித் திட்டமிடல் பணிப்பாளர் (கிரிவாசகம்) திரு எஸ். ரி. பத்மநாதன், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு என் வேலுப்பிள்ளை, பெரும்பாக உத்தியோகத்தர் திரு கே. கந்தரேசன், கிளிநொச்சி கமநலசேவை நிலையத் தலைவர் திரு கே. பாக்கியநேசர் ஆகியோருடன் விவசாயப் போதனாசிரியர்கள், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

★ கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் பெரும்போகச் செய்கையில் 90 வீதமான வேலைகள் இயந்திரங்களையும்—

10 வீதமான வேலைகள் கால்நடைகளைக் கொண்டும் மேற்கொள்ளப்படுகின்றன

ஆகவே எதிர்வரும் 86-87 பெரும்போக செய்கையின் போது எரிபொருள் தட்டுப்பாடு நிலவாதிருக்க கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் மேலிடத்துடன் தொடர்பு கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

★ பசளை, மருந்து வகைகள் தட்டுப்பாடு நிலவாதிருக்க தனியார் விற்பனைப் பிரதிநிதிகள் போதிய கையிருப்பினை முற்கூட்டியே பெற்றுக் கொள்ளச் செய்தல்

★ விவசாயிகள் தமக்குத் தேவையான விதை தானியங்களை அரசினை நம்பியிராது உள்ளூர் விவசாயிகளிடமிருந்து சிறந்தரக விதைகளைப் பெற்றுக் கொள்ளச் செய்தல்

இரணைமடு, கல்மடு, அக்கராயன், புதுமுறிப்பு போன்ற நீர்ப்பாசன குளங்களின் கீழ் மூன்றுமாத, நான்குமாத நெல் இனங்களைப் பயிரிட அனுமதித்தல்,

★ ஏனைய தரிசு நிலங்களில் உழுந்து, பயறு கௌபீ போன்ற உப உணவுப் பயிர்ச் செய்கையினை ஊக்குவித்தல்

மேற்படி தீர்மானங்கள் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன (உ-76)

மறியல் போராட்டம்

கொழும்பு ஜூலை 29

வாழ்க்கைச் செலவைக் குறைக்கும்படி கோரியும் வாழ்க்கைச் சுட்டெண்ணை 5 ரூ. ஆக அதிகரிக்கும்படி கோரியும் 21 தொழிற்சங்கங்கள் அரச, கூட்டுத்தாபன, தனியார் அலுவலகங்கள் முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபடும்

இம் மறியல் போராட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஒரு நாள் மட்டுமே இடம் பெறும். (இ-எ)

மட்டக்குளி குண்டுக்கு ஒருவர் பலி

கொழும்பு ஜூலை 29

குண்டு வெடித்ததில் கொழும்பு, மட்டக்குளியில் அனுரா சிசிரா என்பவர் மரணமானார்.

கடந்த புதன் இரவு இச்சம்பவம் இடம் பெற்றது.

வெடித்தது நாட்டுக் குண்டு என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கள் இரவு பொல்காவலை ரயில்வே விடுதியில் குண்டு வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார்.

இது சம்பந்தமாக 4 பேர் கைது செய்யப்பட்டனர். (இ-ஐ-எ)

தனியார் கல்வி நிலையங்களில் போதிக்கும் ஆசிரியர் விவரம்

கல்வி அமைச்சு திரட்டுகிறது

பலாலி, ஜூலை 29

நாட்டில் இயங்குகின்ற தனியார் கல்வி நிலையங்கள் அவற்றில் கற்பிக்கும் அரசாங்க ஆசிரியர்கள், ஏனைய ஆசிரியர்கள், மாணவர்களுடைய விவரங்கள் அனைத்தையும் அரசாங்க பாடசாலைகளின் அதிபர்கள் மூலம் கல்வி அமைச்சு திரட்டி வருகின்றது

இந்த விடயம் சம்பந்தமாக சகல உயர்கல்லூரி அதிபர்களுக்கும் பிரதிக் கல்வி அமைச்சர் சமரவீர வீரவன்னி சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

விளம்பரப்படுத்தி நடத்தப்படும் தனியார் கல்வி நிலையங்களையும்— அங்கு பயிலும் மாணவர்கள் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரின் எண்ணிக்கை விவரங்களையும் —

கற்பிக்கும் ஆசிரியர்களது தராதரத்தினையும் —

அவர்களில் எத்தனை பேர் அரசாங்க பாடசாலைகளில் கற்பிக்கின்றார்கள் என்ற விவரங்களையும் இம்மாத இறுதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமென அந்தச் சுற்று நிருபத்தில் பணிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை தனியார் கல்வி நிலையங்களில் போதிப்பதை தடுப்பதற்காகவே இந்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என ஆசிரியர்கள் மத்தியில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. (உ-119)

நாளை நடப்பவை

பரிசளிப்பும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ் மாநகராட்சி மன்ற 'யூனிசெப்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியின் பரிசளிப்பு விழாவும் சித்திரக் கண்காட்சியும் நாளை புதன்கிழமை யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்

மாநகர ஆணையாளர் திரு சி வி கே. சிவஞானம் தலைமையில் வைபவம் நடைபெறவுள்ளது. (இ)

சமயச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

முழங்காவில் சித்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக 17 ஆம் நாள் விழா நாளை புதன்கிழமை நடைபெறும்.

முழங்காவில் மகாவித்தியாலயத் துணையதிபரின் உபயத்தில் நடைபெறும் இவ் விழாவில் மாலை 7 மணிக்கு சைவமணி சித்தாந்தச் செம்மல் செஞ்சொல்வாரிதி வித்துவான் மு சபாரத்தினம் 'ஆலயமும் சூழலும்' என்னும் விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

சேவைநலன் பாராட்டு விழா

வட்டுக்கோட்டை' ஜூலை 29

சித்தன்கேணி கணேச வித்தியாலய உப அதிபர் திருமதி பா. செல்லையா அவர்கள் சேவையில் இருந்து இளைப்பாறுவதை முன்னிட்டு நாளை புதன்கிழமை சேவை நலன் பாராட்டு விழா நடைபெறும்.

ஆசிரியர்கள், மாணவர்களால் நடத்தப்படும் இவ்விழா வித்தியாலய அதிபர் சைவப் புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெறும். (உ161)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

பரீட்சை மண்டப உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் கிழமை 9 காலை மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது கலந்து கொண்டவர்களே இந்தக் கலந்துரையாடலுக்கும் அழைக்கப்பட்டுள்ளனர். (உ-10)

கலை விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் கனிஷ்ட பிரிவு கலைவிழா நாளை பிற்பகல் நடைபெறும்.

நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக சங்கீதப் பிரிவு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ் கணபதிப்பிள்ளை, திருமதி ச. கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர். (உ-எ)

திருக்குறள் ஐக்கிய நாணய சங்கம் உதயம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

திருக்குறள் ஐக்கிய நாணய சங்கம், யாழ்ப்பாணம் சந்தர்மடத்தில் உள்ள வை. எம் டி ஏ. பணிமனையில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். ஞானப்பிரகாசத்தினால் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது

பொறியியலாளரான திரு. ஏ. என். யோகநாதன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

தலைமையுரையில் திரு. ஏ என். யோகநாதன் சொன்னதாவது;

2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் பொருளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்று தெளிவாகக் கூறியிட்டார்.

அறத்துப்பாலிலும் பார்க்க பொருட்பாலுக்கு இருமடங்கு அதிகாரங்களை ஒதுக்கி பொருளின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வலியுறுத்திக்கூறியிருக்கிறார் அறத்தின்படி வாழ்ந்து பொருள் ஈட்டி இன்பமாக வாழ நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும்

இப்படி திரு. யோகநாதன் சொன்னார். (உ-எ)

மரண அத்தாட்சி பத்திரங்களைப் பெற உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 29

அசம்பாவிதங்களின் போது மரணமானவர்கள், காணமல் போய் இறந்ததாக பின்னர் நிச்சயிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கான மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதில் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

இவர்களுக்கு தமது ஒத்துழைப்பை வழங்க பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழு முன்வந்துள்ளது

வெளிமாவட்டங்களிலிருந்து உறவினர்களை இழந்து வந்தவர்கள்— அதிகாரிகளுடன் இது சம்பந்தமாக தொடர்பு கொள்ள முடியாதவர்கள் —

இதுவரையும் இறந்தவர்களுக்கான அத்தாட்சிப் பத்திரம் பெறாதவர்கள் ஆகியோர் பிரசைகள் குழுக்கள் மூலம் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு ஒன்றிணைப்புக் குழு கேட்டுக் கொண்டுள்ளது. (உ-5)

நன்றி நவிலலும் தசாக அழைப்பும்

பிரம்மஸ்ரீ
திரு. ச. சபாரத்தினக் குருக்கள்

மலர்வு: 07-02-1902
உதிர்வு: 21-07-1986

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும் இறுதிச் சடங்கு ஒழுங்குகளில் உதவியவர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை புதன் கிழமை (30-7-1986) வீட்டில் நடைபெறும் தசாகக் கிரியையிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

மகன்:
ச. மனோகர சர்மா
(சித்திவிநாயகர் கோயில் பிரதம குரு),
மன்னார்.

ஸ்ரீரங்கம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி

நீத்தார் பட்டியல்

பே. அல்பிறெட்

(பங்காளர் நவ லங்கா ஸ்ரோஸ், நீர்கொழும்பு)

நாரந்தனையைச் சேர்ந்த திருவாளர் பே. அல்பிறெட் (பங்காளர் நவ லங்கா ஸ்ரோஸ், நீர்கொழும்பு) அவர்கள் 27-7-86ல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி பேதுருப்பிள்ளையின் அன்பு மகனும் திருமதி றெஜினா அவர்களின் அன்புக் கணவரும், திருமதி விஜினி யோசவ், புறுனோ (ஜேர்மனி), யூஜினி, தர்சினி (திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ்.), அன்ரு பேரூ (சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அ யோசவ் (ஆசிரியர், சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்.) அவர்களின் மாமனாரும் P S இரத்தினம், காலஞ்சென்ற ஹட்ஸ் பத்திநாத (ஆசிரியை) ஆகியோரின் சகோதரனும், ஜெயரெட்ணம் (அவுஸ்திரேலியா), ஜெயந்தி ஆகியோரின் சிறிய தந்தையும், செல்வன் சரோன்ராஜ், செல்வி இவோன் அக்ரேஜி ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி பேபி இரத்தினம், காலஞ்சென்ற சேவியர், டேவிற் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), தாசன், அன்ரனி, திருமதி ராசா அஞ்சலா ஆகியோரின் மைத்துனருமாவார்.

நல்லடக்கம் (30-7-86) புதன் காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு நாரந்தனை புனித பேதுருவானவர் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நாரந்தனை மேற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
அ. ஜோசவ்,
(ஆசிரியர்),
யாழ்நகர்

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

யாழ் மாவட்டத்திற்கு விதைநெல்

வெளியிலிருந்து தருவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்ஜூலை ,29

யாழ் மாவட்டத்துக்குத் தேவைப்படும் விதை நெல்லை வெளி மாவட்டங்களில் இருந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தருவித்துக் கொடுக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

விதைநெல் தேவைப்படும் விவசாயிகள் தமது பகுதியில் உள்ள கமத்தொழில் அலுவலர்களிடம் தமது பெயர்களையும் தேவைகளையும் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள்.

அதேவேளை, 'விவசாயிகளுக்குத் தேவைப்படும் விதைநெல் முழுவதையும் விநியோகிக்கும் நிலையில் விவசாய திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம் இல்லை' என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

வேலணையில் வரட்சி; கால்நடைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

வேலணையில் வரட்சியைத் தொடர்ந்து போதிய தீனியில்லாத காரணத்தால் ஆடு,மாடுகள் பெருந்தொகையில் சாகும் நிலை உருவாகி உள்ளது

வரட்சி காரணமாக அப்பகுதியில் தீனிஇல்லை. அதே வேளை போக்குவரத்து பிரச்சினை காரணமாக அப்பகுதிக்குத் தேவைப்படும்வைக்கோல் பெறமுடியாத நிலை உருவாகி உள்ளது.

ஆடு மாடுகளுக்குத் தேவைப்படும் குடி தண்ணீருக்கும்கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

வேலணை கமநலசேவை குழுக் கூட்டத்தில் இந்த விடயம்பற்றி ஆராயப்பட்டது. யாழ்மாவட்ட கமநல சேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு க. பரமலிங்கம் இக்கூட்டத்தில் பிரசன்னமாக இருந்தார். (உ-9)

பாதிக்கப்பட்ட

அடம்பன் மக்களுக்கு உணவுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கடந்த 13 ஆம் திகதி அடம்பனில் ஏற்பட்ட அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 30,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் மன்னார் அரச அதிபர் ஊடாக வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட சர்வோதய நிறுவனம், மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் தலா 10,000 ரூபா பெறுமதியான உணவுப் பொட்டலங்களை வழங்கின.

பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட 10,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களும் மன்னார் அரச அதிபர் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. (இ-எ-6)

உடுவில் பகுதி இருளில் மூழ்கும் நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகத்திற்கு மின் பாவனையாளர்கள் எட்டு இலட்சம் ரூபா வரை செலுத்த வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்குள் மின் பாவனையாளர்கள் மின் கட்டணங்களைச் செலுத்தத் தவறின் உடுவில் பகுதி முழுவதும் இருளில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

"சகல மின் பாவனையாளர்களுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள்" என்ற தலைப்பின் உடுவில் உப- அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு இ. கணேஸ்வரனால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு [illegible] மாதம் முடியும் வரையிலான காலப்பகுதிவரைக்கும் மின் பாவனையாளர்களிடமிருந்து எமக்கு எட்டு இலட்சம் ரூபா வரை நிலுவையாக இருக்கிறது

இதன் காரணமாக இலங்கை மின்சார சபையிடமிருந்து எம்மால் கொள்வனவு செய்யப்படும் மின் கட்டணத்திற்கான பணத்தை நாம் குறிப்பிட்ட தவணைக்குள் செலுத்த முடியாது உள்ளது.

இதனால் எமக்கு விநியோகிக்கப்படும் மின்சாரத்தை துண்டித்து விடப்போவதாக நாம் பல தடவைகள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்— [illegible] கப்பட்டிருக்கிறது. (உ-[illegible])

ஒரு யுத்தத்துக்கு தேவையான ஆயுதங்கள் அமெரிக்காவிடம் உள்ளது

அமெ. பேராசிரியர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 29

ஒரு யுத்தத்துக்குத் தேவையான அணுவாயுதங்கள் அமெரிக்காவிடம் நிறைய உள்ளன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இராணுவத் தளங்களை நிறுவ வேண்டிய அவசியம் அமெரிக்காவிற்கு ஏற்படவில்லை.

அமெரிக்கப் பேராசிரியர் மோர்டன் ரெல்லர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் [illegible] அமெரிக்கப் பேராசிரியர் [illegible]வது:

அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக தெற்காசிய நாடுகளை அமெரிக்கர்கள் கருதவில்லை.

அதனால் தெற்காசிய நாடுகளிடையே நிலவும் அரசியல் தகராறுகளை தீர்க்கும் நடவடிக்கைகளில் பெரிய அளவில் அமெரிக்கா இறங்காது

இப் பிராந்தியத்தில் நிச்சயமாக அமெரிக்கா இராணுவ ரீதியில் தலையிடாது. சமாதானத் தீர்வு காணுவதற்கான சகல முயற்சிகளுக்கும் அமெரிக்கா உதவும்—

இப்படிப் பேராசிரியர் சொன்னார் (இ-எ)

இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக

18 நாட்டு மாணவர் சென்னையில் ஊர்வலம்

சென்னை, ஜூலை 28

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து 18 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் அண்மையில் சென்னையில் ஊர்வலம் நடத்தினார்கள்.

இவர்கள் தமிழக அரசின் தலைமை செயலாளர் டி. வி. அந்தோனியைக் கோட்டையில் சந்தித்து கோரிக்கைமனு ஒன்றைக் கொடுத்தார்கள்.

ஊர்வலம் சென்னை பச்சையப்பன் கல்லூரி அருகே இருந்து புறப்பட்டது

18 நாடுகளைச் சேர்ந்த மாணவர் பிரதிநிதிகள் 105 பேரும் மற்றும் ஆயிரக்கணக்கான மாணவர்களும் கலந்து கொண்ட இந்த ஊர்வலத்துக்கு ஜே பி. ஜோசப் தலைமை வகித்தார்.

"இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண மத்திய—மாநில அரசுகள் வற்புறுத்தவேண்டும்" என்று மனுவில் அவர்கள் கோரியிருந்தனர் (இ)

நினைவஞ்சலி

சிவாலிங்கம் இராமநாதன்துரை
(இராமண்ணா, சாந்திபூசன், வல்வெட்டித்துறை)

தோற்றம்: 17—07—1954
மறைவு: 02—05—1986

இலட்சியத்துக்காக வாழ்ந்து 29-04-1986 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எம் அன்புச் செல்வத்தின் ஆத்ம சாந்திக்கான 30-07-1986 (புதன்) அன்று வல்வை ஊறணி மயானத்திலுள்ள சமாதியில் நடைபெறும் கிரியைகளில் பங்கெடுக்க அன்பர்கள் அனைவரையும் அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்,
தந்தையார்,குடும்பத்தினர்,உறவினர்,நண்பர்கள்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

உதய சங்கற்பம்

உயர்ந்த உண்மை மலர்வது ஆழ்ந்த அன்பிலேயே

—ஹீன்;

உதயன்
உண்மை - [illegible] - நடு நிலைமை

இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி. 22073
யாழ்ப்பாணம், 29-07-86 த பெ 23

தொப்பிக்கு வெளியே பூனை!

அவசர காலச் சட்டவிதிகளை நீடிப்பதற்கு இனிமேல் நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை இல்லை. சாதாரண பெரும்பான்மை வாக்குப் பலத்துடனேயே நாடாளுமன்றம் அதனை நீடிக்கலாம்.

அதற்கேற்ற விதத்தில் நாட்டின் அரசமைப்புச் சட்டத்திற்குத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது அதற்குரிய திருத்தச் சட்டம் சென்ற வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

1978 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த அரசமைப்புச் சட்டத்திற்கு இது பத்தாவது திருத்தம் அரசமைப்புச் சட்டத்திற்கு அடிக்கடி திருத்தம் கொண்டு வந்து சாதனை புரியும் நாடுகளில் ஒன்றாக இலங்கையும் விளங்குகிறது. அது வேறு விடயம்.

அவசர காலச் சட்டம் மிகவும் கவனத்துடன் கையாளப்பட வேண்டியது மிகவும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அதே வேளை நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் போதும், மக்களின் பாதுகாப்புக்கு ஆபத்து உண்டான போதும் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரப்பட வேண்டியது.

ஆனால் எங்கள் நாட்டுச் சரித்திரத்தில், மிக மிகத் தேவையான நேரங்களில் அது அமுல் செய்யப்பட்டதில்லை. அரசாங்கம் தனது நோக்கங்களை அடைவதற்காக தேவையில்லாத நேரங்களிலும் அவசர காலச் சட்டத்தை அமுல் செய்து மக்களை வேண்டாத கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாக்கியதும் உண்டு அவை சம்பந்தப்பட்டது தனியான ஒரு முழு விவகாரம்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இலங்கையில் தொடர்ச்சியாக அவசர கால நிலைமை அமுலில் இருக்கிறது அது இன்னொரு தனி விவகாரம்

அவசர கால நிலைமையை நீடிக்க மூன்றில் இரண்டு நாடாளுமன்ற பெரும்பான்மை தேவை என்று இருந்ததை சாதாரண பெரும்பான்மை என்று குறைப்பதற்குக் காரணம் என்ன? உள்நோக்கம் என்ன?

இவை குறித்து மட்டுமே இப்போது இங்கு ஆராய்வது பொருத்தம் என்று நினைக்கிறோம்.

அடுத்த பொதுத்தேர்தல் விகிதாசார முறைப்படி தான் நடக்கும். ஆகையால் எந்தக் கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவது கஷ்டம். ஆகையால் தான் இப்படி ஒரு திருத்தம் அவசியமாகிறது என்று அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டது.

அரசாங்கத்தில் இரண்டு மூன்று பிரிவுகள் ஏற்பட்டுவிட்டன. அரச எம் பிக்களின் ராஜினாமாக் கடிதங்களையும் ஜனாதிபதி திரும்ப ஒப்படைத்து விட்டார் ஆகையால் இனிமேல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைப்பது துர்லபம் அதனால் தான் அரசாங்கம் இந்த விஷயத்தில் அவசரப்படுகிறது என்று எதிர்க்கட்சிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் கடந்த வியாழக்கிழமை அரசமைப்பின் பத்தாவது திருத்தச் சட்ட விவாதத்தில் பேசிய தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி புதிய காரணம் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்

தொப்பிக்குள் இருந்து பூனையை வெளியே விடுவது என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதனை அமைச்சர் லலித் செய்திருக்கிறார். அந்த வகையில் அவருக்கு நன்றி கூறலாம்.

அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது குறித்து இப்போது திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. உப தேசிய அமைப்பு ஒன்றுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும்போது. அவசர கால நிலைமையின் கீழ் அந்த பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தை மத்திய அரசு திருப்பி எடுப்பதற்கு வகை செய்யப்படும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்ற நியதி இருந்தால் அதிகாரப் பகிர்ந்தளிப்பில் சதி நடக்கலாம்.

இவ்வாறு அமைச்சர் அத்துலத் கூறினார் அவர் மனதில் வைத்துச் சொன்னது மாகாண சபையா அல்லது தமிழ் மொழி பிரதேச அமைப்பா என்பது தெரியாது.

ஆனால் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரத்தை வெகு சுலபமாக சாதாரண பெரும்பான்மை வாக்குகளுடன் திரும்பப் பெற இந்தத் திருத்தம் உதவும். அவ்வாறாயின் அதிகாரப் பரவலோ, பகிர்ந்தளிப்போ எதற்கு?

மத்திய அரசு, ஏதோ ஒரு நொண்டிச் சாட்டை வைத்துக் கொண்டு, அடிக்கடி பகிர்ந்து கொடுத்த அதிகாரத்தை தானே மீளப் பெறலாம். அவ்வாறாயின் புதிய அமைப்புகள் எப்படி சுயேச்சையாக— மத்திய அரசுக்கு முட்டுக் கொடுக்காமல்— தன்னிச்சையாக இயங்க முடியும்?

அரசாங்கம் நினைத்த நினைத்த போதெல்லாம் அதிகாரத்தை தன்வசமாக்குவதற்கு இது ஒரு பெரும் சூழ்ச்சி— வஞ்சனை அல்லவா?

உத்தேச புதிய அமைப்புகள் உண்மையாகவே தவறு விட்டால் அவற்றைக் கலைக்கலாம். ஆனால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களை மீளப்பெறுவது என்றால் நாட்டு நிர்வாகம், பிரதேச நிர்வாகம் எப்படிச் சீராக, ஒழுங்காக நடக்க முடியும்?

அதிகாரப் பரவலில், கருவிலேயே சூழ்ச்சி நடந்தால், கழுத்தறுப்பு நடந்தால் பின்னர் அது எப்படி ஆகும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டியதில்லை

இது விஷயத்தில் எல்லோரும் கவனமாகவும், விழிப்பாகவும் இருக்க வேண்டும். இது ஒரு முன் எச்சரிக்கையாகவும் அமையட்டும்.

இந்தியாவில் 18 எய்ட்ஸ் நோயாளர்

புதுடில்லி, ஜூலை 28 இந்திய சுகாதார அதிகாரிகள் 18 'எய்ட்ஸ்' நோயாளிகளைக் கண்டு பிடித்துள்ளனர்.

இத்தகவலை மத்திய சுகாதார அமைச்சர் திருமதி சரோஜ் கபாடி வெளியிட்டார்.

கடந்த மாதம் பம்பாயில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் மரணமானார்.

அமெரிக்காவில் இருதய அறுவைச் சிகிச்சைக்குச் சென்றிருந்த இவருக்கு இந்த நோய் தொற்றி இருக்கலாம்.

எய்ட்ஸ் தடுப்பு நிலையங்களாக இதுவரை 11 நிலையங்கள் செயற்படுகின்றன. மேலும் 17 நிலையங்கள் உருவாக்கப்படும்.

இப்படி அவர் கூறினார். (இ-ஒ)

மேற்காசியா சம்பந்தமான [redacted]

ஐ. நா. தீர்மானத்தில் திருத்தம் வேண்டும்

பி. எல். ஓ. கோரிக்கை

அம்மான், ஜூலை 28 பலஸ்தீனர்களுக்கு தாயகம் கிடைக்க வேண்டும். இதற்காக ஐ. நா. தீர்மானத்தில் இருத்தம் செய்யப்பட வேண்டும்.

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் (பி எல் ஓ) மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

பலஸ்தீனர்களுக்கு சுய நிர்ணய உரிமை மற்றும் தனிப்பட்ட தாயகம் உட்பட அவர்களது உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் விதத்தில் மேற்காசியா, குறித்த ஐ நா. தீர்மானத்தில் திருத்தம் கொண்டு வரப்படவேண்டும்.

அப்படியான திருத்தம் வரும் பொழுதுதான் பலஸ்தீன விடுதலை இயக்கம் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளும்.

மேற்காசிய உடன்பாடு பற்றி விசாரிப்பதற்கு சர்வதேச மாநாடு ஒன்று அமைக்கப்பட வேண்டும என்று அண்மையில் ரஷ்யாவும் பிரான்ஸும் வெளியிட்ட யோசனையை பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் ஆதரிக்கும்.

இவ்வாறு பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தின் அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-ஒ

இந்திய செயற்கைக்கோள் கயானாவிலிருந்து செல்லும்

பெங்களூர், ஜூலை 28 இந்திய செயற்கைக் கோள் "இன்சாட் ஒன்று சி" 1988ஆம் ஆண்டு பிரெஞ்சு கயானாவிலிருந்து விண்வெளிக்குச் செலுத்தப்படும்.

இதற்கான உடன்பாடு ஒன்றில் பெங்களூரில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி ஸ்தாபனத் தலைவர் திரு யூ ஆர். ராமும் பிரெஞ்சு ஏரியான் விண்வெளி அமைப்புத் தலைவர் திரு பிரட்டிறிக் டியாலாற்றும் கையெழுத்திட்டனர்.

இந்த ஆண்டு அமெரிக்காவிலிருந்தே "இன்சாட் ஒன்று சி" செயற்கைகோளை செலுத்த முதலில் திட்டமிடப்பட்டிருந்தது.

அமெரிக்க சலஞ்சர் கலத்துக்கு ஏற்பட்ட பேரழிவால் செலுத்தி வைக்கப்படும் இடம் மாற்றப்பட்டது. (இ-ஒ)

பணயக் கைதி விடுவிப்பு

லண்டன், ஜூலை 28 பதினெட்டு மாதங்களாக லெபனனில் பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த அமெரிக்கர் ஒருவர் இன்று விடுவிக்கப்பட்டார்.

ஈரான் சார்பான அமைப்பு ஒன்றினால் இவர் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்டிருந்தார் இவருடன் பணயக் கைதிகளாக்கப்பட்ட வேறு மூன்று அமெரிக்கர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை (உ)

உடன்படிக்கை கைச்சாத்து

இஸ்லாமபாத், ஜூலை 28 பாகிஸ்தானும் பங்களாதேஷும் மூன்று உடன்படிக்கைகளில் நேற்று இஸ்லாமபாத்தில் கைச்சாத்திட்டுள்ளன

இருதரப்பு வாணிபம் கலாசாரப் பரிவர்த்தனை இருநாட்டுத் தூதரகங்கள் தொடர்பான திட்டம் என்பனவே கைச்சாத்தான உடன்படிக்கைகளாகும். (ஒ)

அங்கோலாவில்

அங்கோலாவில் அரச துருப்புகள் 72 பேரை கொலை செய்ததுடன் பலரைச் சிறைப்படுத்தியிருப்பதாகவும் மின்நிலையம் ஒன்றைத் தகர்த்துள்ளதாகவும் அங்கோலா கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில்

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இளம் விபச்சாரிகளை மர்மமான முறையில் கொலை செய்யும் ஒருவருக்கு இதுவரை 18 பெண்கள் பலியாகியுள்ளார்கள்.

ஸ்பெயினில்

ஸ்பெயினில் மீண்டும் பதவிக்கு வந்த அரசாங்கம் தனது அமைச்சரவையிலிருந்து 5 பழைய அமைச்சர்களை நீக்கியிருப்பதாக சோஷலிசப் பிரதமர் பிலிப்பி கொன்சலஸ் அறிவித்துள்ளார்.

வெளி உலகில்

சோலில் நடைபெறவிருக்கும்

ஆசிய விளையாட்டுகளைக் குழப்பத் திட்டம்?

சோல், ஜூலை 28 தென்கொரியாவில்- சோலில் - செப்டம்பர் 20 இல் ஆரம்பமாகும் 24 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளைக் குழப்புவதற்கு வெளிநாடுகளில் இயங்கும் தீவிரவாதக் குழுக்கள் திட்டமிட்டுள்ளனவாம்.

இப்படித் தகவல்கள் கிடைத்ததைத் தொடர்ந்து தென்கொரியப் பொலிஸார் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே 8 தீவிரவாதிகள் தென்கொரியாவினுள் நுழைந்து விட்டனர்

லிபியா, பாலஸ்தீனம், மொரோக்கோ நாட்டுத் தீவிரவாதிகள் தென்கொரியாவினுள் நுழைந்து விட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-எ)

பொய்யாமொழி

குறள்:

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

பொருள்:

ஒப்புரவாகிய நற்பண்பு உடையவனிடம் செல்வம் சேர்ந்தால், அஃது ஊரின் நடுவே உள்ள பயன் மிகுந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்றது.

மாகாண சபை:

அதிகாரங்களை சுலபமாக

திரும்பப்பெறவும் அரசமைப்பின்

10 ஆவது திருத்தம் உதவும்

லலித் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 29 அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் சாதாரண பெரும்பான்மையைப் பாவித்து அதிகாரப் பகிர்வின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை திரும்பப் பெற மத்திய அரசுக்கு அரசமைப்பின் பத்தாவது திருத்தம் உதவும்.

மூன்றில் இரண்டுபங்கு பெரும்பான்மை சட்டத்தைத் தொடர்ந்து வைத்திருப்பது அதிகாரப் பகிர்வு செயனாக்கத்தை முறியடிக்கவே உதவும்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்

அரசமைப்புச் சட்டத்தின் பத்தாவது திருத்த விவாதத்தில் பங்கு பற்றிப் பேசுகையில் அமைச்சர் லலித்அத்துலத்முதலி மேலும் சொன்னதாவது;

1978 இல் கொண்டு வரப்பட்ட அரசமைப்புச் சட்டம் இரண்டு விஷயங்களை வலியுறுத்தியது.

ஒன்று, அவசரகாலச் சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும்.

இரண்டு, அது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தை கண்டபடி அமுல் செய்யக்கூடாது என்று அரசமைப்புச் சட்டத்தை அன்று தயாரித்தவர்கள் நினைத்தனர்.

அவசரகாலச் சட்டம் இப்போது அடிக்கடிப்புதுபிக்கப்பட்டு வருகின்றது. இதை அன்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

3 இல் 2 பங்கு பெரும்பான்மையைப் பொறுத்த மட்டில் இன்றைய அரசுக்கு பிரச்சினையே கிடையாது.

1989 பொதுத்தேர்தலுக்குப் பின்னர் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் எந்த ஒர் அரசியல் கட்சிக்கும் 3 இல் 2 பங்கு பெரும்பான்மை கிடைக்கக் கூடிய வாய்ப்பு இல்லை.

இந்த நிலையில் இது சம்பந்தமான விதி தொடர்ந்து இருக்குமானால் அவசரகாலச் சட்டத்தை அமுல்நடத்துவது அரசின் பிரச்சினையாக இருக்காது; எம் பிக்களிடையே காணப்படும் உடன்பாடு சம்பந்தமாகவே அமையும்.

தற்போதைய சூழ்நிலையில் அது விரும்பத்தக்கது அல்ல.

அவசரகாலச் சட்டத்தை அமுல் நடத்த முடியாத நிலையில் அர[illegible] திருத்தச் சட்டம் தயாரிக்கப்பட்டது.

இனப்பிரச்சினைக்கு ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைகளைத் தொடர்ந்து மேலும் சில காரணங்களை கூறக்கூடியதாக இருக்கிறது.

அதிகாரப் பகிர்வு சம்பந்தமான இந்த யோசனைகளின்படி உப தேசிய பிரிவுகளுக்கு கொடுக்கப்படும் அதிகாரங்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் திரும்ப எடுக்க முடியும்

அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யும் சமயத்தில்தான் இப்படித் திரும்பப் பெறப்படும்.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை விதி தொடர்ந்து இருந்தால் இப்படித் திரும்பப் பெற முடியாத நிலைமைதான் ஏற்படும்-

ஆகவே பத்தாவது திருத்தம் பயனுள்ள திருத்தமாகும். எப்படி இருப்பினும் அவசரகால நீடிப்புக்கு வாக்களிக்க அரசாங்கத்திடம் 3 இல் 2 பங்கு எம். பிக்கள் இருப்பார்கள்.

இப்படி அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மத்துகம எம். பி. அனில் முனசிங்க பேசுகையில் சொன்னதாவது;

மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்[illegible] பத்தா[illegible] உண்மையான நோக்கம் என்று அமைச்சர் கூறினார்.

வீழ்ச்சியின் பாதையில் அரசு சென்றுகொண்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது

அரச எம் பிக்கள் கொடுத்த ராஜினாமாக் கடிதங்கள் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டு விட்டன.

இதனால் தான் இத் திருத்தத்தை அரசு கொண்டு வருகிறதா என்று தான் ஆச்சரியப் படுகிறேன்.

இதனால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை தொடர்ந்து பெற தன்னால் முடியாது என்று அரசு கருதுகின்றதா?

இப்படி திரு. அனில் முனசிங்கா சொன்னார். (இ-எ)

கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராகபகைஉணர்வை

தூண்டிவிட அரசு முயற்சி

ஆண்டு நிறைவுவிழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 29 அரச பயங்கரவாதத்துக்கெதிராக போராடி வரும் போராளிகளை மார்க்சிய பயங்கரவாதிகள் என வர்ணித்து மக்கள் மத்தியில் கம்யூனிஸ்ட்டுக்களுக்கெதிரான ஒரு பகை உணர்ச்சியை தூண்டிவிட பேரினவாத அரசு முயற்சிக்கின்றது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டச் செயலாளர் திரு. பொன் குமாரசாமி இவ்வாறு கூறினார்.

முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான திரு ஐ. ஆர். அரியரத்தினத்தின் 70 ஆம் ஆண்டு நிறைவு விழாக் கூட்டம் நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்றது.

அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி எவருமே சிந்திக்காத காலகட்டத்தில் 1980 ஜூலை மாதம் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 11 ஆவது தேசிய மாநாட்டிலே இணைப்புச் சம்பந்தமான தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டது.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சுயாட்சிப் பிராந்தியங்களை அமைக்கும் உரிமை அத்தகைய பிராந்தியங்கள் விரும்பினால் ஒன்றிணைவதற்கான உரிமையும் தமிழர்களுக்கு உண்டு.

இந் நிலையிலிருந்து கட்சி என்றுமே மாறியதும் கிடையாது

எனவே இத்தீர்வை இடைக்கால தீர்வாகவே கட்சி கணித்துள்ளது

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இன்றைய முதலாளித்துவ ஆட்சி முறையின் கீழ் நிரந்தரமான தீர்க்கமான தீர்வு கண்டு விடமுடியாது

ஒரு சோஷலிச ஆட்சி அமைப்பில் மாத்திரம் ஒரு பூரண தீர்வுகாண முடியும் என கட்சி நம்புகின்றது.

எனவே இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்படும் உடன்பாட்டிற்கு கட்சி குந்தகமாக செயல்பட மாட்டாது. அதனை ஆதரிக்கும்.

இப்படி அவர் கூறினார்.

பரமேஸ்வராக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. எஸ். சிவபாதசுந்தரம், திரு. அ. வைத்திலிங்கம் எம். சி சுப்பிரமணியம், டொமினிக்ஜீவா. கலாநிதி சோ. கிருஷ்ணராசா திரு. எஸ். விஜயானந்தன் உட்பட பலர் திரு. ஐ ஆர் அரியரத்தினத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினர். (இ)

அநீதி ஒழிப்பு

ஒன்றியக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29 கடந்த வெள்ளிக்கிழமை வதிரி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் அநீதி ஒழிப்பு ஒன்றியத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றது.

1983 ஜூலை 25, ஆம் 26 ஆம் திகதிகளில் இடம்பெற்ற வெலிக்கடைக் கொலைகளையும் இனப்படுகொலையையும் வன்மையாகக் கண்டிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (இ)

வித்தாரம்

என்ன முரளி! கழுத்திலை புதிசா ஏதோ பளபளக்குது? அட சங்கிலி! என்ன எது புடம் போட்ட தங்கமோ? அல்லது ரோல்ட் கோல்டோ?

ரோல்ட் கோல்ட், கில்ட், வெள்ளி எதெண்டாலும் சரி. ஒரு சங்கிலி கழுத்திலை போட வேணும் எண்டது இப்பத்தைப் பாஷன்!

நீ என்னெண்டு அதுக்குப் புறம்பாக முடியும்! நீ விஷயகாரன் தங்கச் சங்கிலி போடமாட்டாய், கில்ட் எண்டதைப் பிடிச்சுப் பாக்காமலே சொல்லலாம்.

உதைக் கண்டவுடனை எனக்குப் 'பெந்தன்' சமாச்சாரம் நினைவுக்கு வருகுது. அதுகும் பெறுமதி கூடிய முத்தும் இரத்தினமும் பதிச்ச பெந்தன்.

முந்தி ஒருக்கா உனக்கு லேசா அது பற்றிச் சொன்னதாக ஞாபகம். ஆனால் இப்ப விரிவாய் சொல்ல வேண்டியதாய் இருக்கு.

உவர் பண்டாரி தெரியுமெல்லே. அவர் எங்கடை நாட்டுச் செல்லப் பிள்ளையாய் இருந்தவர். அவரைத் தான் சமரசப் பேச்சுத் தூதுவராக அனுப்ப வேணும் எண்டு அரசாங்கம் கேட்டது அதிலை எல்லாம் கன விஷயங்கள் இருக்கு

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க ஒரு திட்டம் தீட்டுமாறு விட்ட உடனை, அவர் தனக்குத் தான் முழு அதிகாரமும் இருந்ததாக நினைச்சிட்டார். எப்படியாவது ஒரு தீர்வைக் கொண்டு வந்தால் தனக்கும் பெருமை எண்டு நினைச்சிட்டார்.

அதாலை என்ன செய்தார் தெரியுமே. ஒரு கட்டத்திலை நீங்கள் மாகாண சபையைக் குடுங்கோ தமிழ்க் கோஷ்டியளை நாங்கள் சமாளிக்கிறோம். அவையை ஒரு மாதிரி வழிக்குக் கொண்டு வரலாம் எண்டு இலங்கைப் புள்ளிகளுக்குச் சொல்லிப் போட்டாராம். இதிலை தெரிஞ்சோ தெரியாமலே மற்ற இந்தியக் காயும் சம்பந்தப் பட்டதாகத் தகவல்.

அதை வைச்சுக் கொண்டு தான் அரச மாகாண சபையோடை தொங்கப் பாக்குதாம். இது இந்திய மேலிடத்துக்கு விளங்கினதாலை தான் பண்டாரியை அனுப்பாமல் பிறகு சிதம்பரத்தை அனுப்பினதாம்.

இந்திய மேலிடமும், இலங்கை விஷயத்திலை (அங்கை) சூத்திரதாரியளா இருக்கிறவையும் மாநில மட்டத்திலை நடக்கிற அதிகாரப் பரவலுக்குத் தான் ஆதரவு எண்டு கேள்வி.

மாகாண சபை எண்டதிலை இருந்து ஒருவித மான மாநில அமைப்பு உயரத்துக்கு இலங்கை அரசாங்கத்தை கட்டிக் கொண்டு போகலாம் எண்ட நம்பிக்கையும் இருக்காம்.

அதனாலை தான் தமிழ் மொழி மாநில திட்டம் பற்றி அரசாங்கம் எந்த வித கருத்தும் சொல்லாமல் விஷயத்தை பொறுதியாய் கொண்டு போறதாகவும் அக்கரைக்குப் போய் வந்த சில புள்ளியள் நம்பிக்கை தெரிவிக்கினம்.

அக்கரையிலும் பல இக்காலும், இசையாலும் இந்திய மேலிடம் கொஞ்சம் காறுபாடா நிற்பதாகவும் சொல்லுகினம். உதுகளிலை சில வேளை உண்மை பொய் கண்டறிய ஏலாது... அது பெரிய கஷ்டம்!

திண்ணேடி

லண்டனில்

லண்டனிலுள்ள நொட்டிங்காம் பல்கலைக்கழகத்தினர் புற்றுநோய்க்கிருமிகளை அழிக்கும் புதிய சோதனையில் வெற்றியீட்டியுள்ளனர். எலிகளில் மேற்கொள்ளப்பட்ட இப்புதிய சோதனைகள் மனிதரிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

உதயன்
29-07-1986 செவ்வாய்க்கிழமை

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில்
உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

காங்கேசன் துறைமுக பகுதியில் சிப்பாய்கள்

சோதனைகளும் நடைபெறுகின்றன

காங்கேசன்துறை, ஜூலை, 29

காங்கேசன் துறைமுகப் பகுதியில் இராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சோதனைகளும் இடம்பெறுகின்றன.

அண்மையில் பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகள் குழு ஒன்று துறைமுகப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமையை ஆராய்ந்தது. அதன் பின்பே பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

துறைமுகப் பகுதிக்கு அடிக்கடி வந்து செல்லும் சிப்பாய்கள் தற்போது பகல் முழுவதும் அங்கேயே காவலில் ஈடுபடுகின்றனர்.

அத்துடன் வேலைக்குச் செல்பவர்களும், கப்பலில் இருந்து சாமான்களை இறக்கப் போகிறவர்களும் சோதனைக்குட்படுத்தப்படுகிறார்கள்.

சிப்பாய்களால் விநியோகிக்கப்பட்ட அடையாள கார்ட்டுகளை சகலரும் வைத்திருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையால் துறைமுகப் பகுதியில் வேலை செய்யும் தொழிலாளர் மத்தியில் பதற்றம் காணப்படுகிறது.

உணவுக் கப்பல்களும், சிமெந்துக் கப்பல்களும், படையினருக்கு வரும் கப்பல்களும் காங்கேசன் துறைமுகத்தில் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது (இ-68)

அமிருக்கு சரியான பாதையை காட்டி இருக்கிறேன் - ஜே. ஆர்.

கொழும்பு, ஜூலை 29

திரு. அமிர்தலிங்கம் பிழையான பாதையில் சென்றார். இப்போது நான் அவருக்குச் சரியான பாதையைக்காட்டியுள்ளேன்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார்.

பிரிவினைகோரும் குழுக்களுடன் பேச்சுக்கள் நடத்த முடியாது என்று முன்னர் கூறினீர்களே இப்போது கூட்டணியுடன் பேச்சு நடத்துகின்றீர்கள்? — இப்படி கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கே ஜனாதிபதி மேற்கண்டவாறு பதிலளித்தார்.

லண்டனில் நடந்த தொழிற்சங்கக் கூட்டம் ஒன்றில் சங்க உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி பதிலளித்தார்.

சில கேள்வி - பதில்கள் வருமாறு:

கேள்வி: மாகாண சபைத் தேர்தல்களில் உமா மகேஸ்வரனும் போட்டியிட முடியுமா?

ஜே ஆர்; மன்னிப்பு வழங்கப்பட்டால் அவர்கள் வரலாம்; போட்டியிடலாம்

கேள்வி: மாகாண சபைகள் அமுலுக்குவந்த பின்னர் வடக்கு, கிழக்கில் இருந்த இராணுவ முகாம்கள் அகற்றப்படுமா?

ஜே ஆர்: இல்லை.

கேள்வி: கவர்னர்களுக்கு என்ன அதிகாரங்கள் இருக்கும்?

ஜே. ஆர்: இன்னும் பரிசீலனையில் உள்ளது.

கேள்வி! மாகாண சபை யாருடைய கண்டுபிடிப்பு?

ஜே ஆர்: எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார நாயக்காவுடையது. சமஷ்டியை ஆதரித்த முதலாவது தலைவர் அவர். அதை அவரின் மனைவி பின்பற்றாவிட்டாலும் நான் பின்பற்றுவேன்.

கேள்வி: எமது இனத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

ஜே ஆர்: எமது இனம் என்று கூறுவதன் அர்த்தம் என்ன? சிங்கள மக்கள் துன்புறுத்தப்பட்டால் எல்லா இனங்களும் துன்புறுத்தப்படுகின்றன என்றுதான் அர்த்தம்.

அனுரா பண்டார நாயக்காவின் பரம்பரையில் தமிழ்க்கலப்பு உண்டு என்று நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனது தந்தையின் பரம்பரை இந்தியவம்சாவழித் தொடர்பு உடையது.

இலங்கையின் கடைசி நான்கு சிங்கள மன்னர்களும் இந்திய வம்சாவழியினரே.

எவருக்கு சுத்தமான சிங்கள இரத்தம் ஓடுகின்றது என்று கூறுவது மிகவும் கஷ்டமான காரியம். (உ-எ)

காரைநகரில்..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு பின்வாங்கிய கடற் படையினருக்கும் எமக்கும் இடையில் ஒன்றரை மணிநேரம் கடும் சமர் இடம்பெற்றது.

சமரின் இறுதியில் தரை சாய்ந்தவர்களை தோழில் சுமந்தவாறு கடற்படையினர் முகாமுக்கு பின்வாங்கினர்.

பின்வாங்கியதும் முகாமுக்குள் இருந்து பலத்த மோட்டார்ஷெல் தாக்குதல் நிகழ்த்தினர். இத்தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவித இழப்புகளும் இல்லை. (உ)

The best in Jaffna
For,
● FOOD
● SERVICE
● COMFORT
Always Avilable at
Hotel Gnanam's
UNDER NEW MANAGEMENT
299, Clock Tower Road, Jaffna.
Open from 9.30 a m. to 11.30 p.m.
Tele; 22082, 23067

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், அச்சகத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 29—07—1986.

Printed and Publishe1 by Uthayan Publi: cations (Private) Ltd. 15 Second Lane, Power House Road. JAFFNA

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 NEWS 86

பட்டதாரி இளைஞர் மரணம்

திருகோணமலை, ஜூலை 29

யாழ் பல்கலைக் கழகப் பட்டதாரி இளைஞன் திருகோணமலையில் மின்சாரக் கம்பம் ஒன்றில் இருந்து விழுந்து மரணமானார்.

அவரின் பெயர் பொன்ராஜ் மோகன்ராஜ் வயது 23 பி எஸ் சி பட்டதாரியான இவர் அடுத்த மாதம் பட்டமளிப்பு விழாவில் பங்குபற்ற இருந்தார்.

திருமலையின் நகரசபை மின்பகுதியில் வேலை பார்த்து வந்த இவர் சம்பவ தினம் மின்கம்பம் ஒன்றில் ஏறி பணியாற்றுகையில் மின்சாரம் தாக்கவே கீழே விழுந்து விட்டார்.

அதனால் தலையில் பலத்த காயம் அடைந்தார். கொழும்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கு உயிரிழந்தார். (இ-எ-150)

குடாநாட்டில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

முன்னால் வீதியில் விழுந்து வெடித்த ஷெல் குண்டின் துண்டுகள் 14 ஆம் வார்ட் முன் பகுதியிலும் வெளி நோயாளருக்கான பழைய சிகிச்சைப் பிரிவிலும் சிதறி விழ்ந்தன.

ஹோட்டல் அசோக், அருகேயுள்ள இரண்டு வீட்டு மதில்கள் ஆகியவையும் சேதமடைந்தன.

இதேவேளை வயாவிளான், காரைநகர் ஆகிய இடங்களிலும் முகாமை விட்டு வெளியே வந்த சிப்பாய்களைப் போராளிகள் தாக்கித் திருப்பி யனுப்பினர்.

கடந்த சனியன்று ஆனையிறவு முகாமை விட்டு வெளியேறிய சிப்பாய்களை நோக்கி போராளிகள் தாக்குதல் நடத்தியது தெரிந்ததே. (உ-6)

ரயில்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்தி கிடைத்தது.

ஒரு சிலர் அதிக கட்டணம் செலுத்தி மினிபஸ் ஒன்றில் நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

விசுவமடுவில் இருந்து வந்த ஒரு பஸ்ஸில் பிரயாணிகளில் ஒரு பகுதியினர் ஏறிக் கொண்டனர்.

மிகுதிப்பேர் முல்லைத்தீவிலேயே தங்கி நிற்கின்றனர்.

வவுனியாவிலிருந்து ரயில் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு ஒரு பஸ் நேற்றிரவு வந்ததாகவும், மற்றொரு பஸ் பயணிகளுடன் முல்லைத்தீவில் நிற்பதாகவும் போக்குவரத்துச் சபை வட்டா [illegible] (உ)

வடபகுதிக் கடலில் கைதான இருவர் திருமலை நீதிமன்றில்

திருகோணமலை, ஜூலை 29

காரைநகர்க் கடற்படையினரால் வடபகுதிக் கடலில் படகு ஒன்றுடன் ஏப்ரல் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இரண்டு காரைநகர் வாசிகள் நேற்றுத் திருமலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை விளக்க மறியலில் வைக்கும்படி பதில் நீதிவான் திரு எம் கே. செல்வராசா உத்தரவிட்டார்.

காரைநகர் முன்னிக்குளம் வடக்கைச் சேர்ந்த வரதலிங்கம் வீரசிங்கம், சின்னையா ஆரியகுமார் ஆகியோரே அவர்கள்.

இவ்வளவு காலமும் இவர்கள் பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

ரேடியோ, கசெட் ஸெப்புகள் ஆகியவற்றைக் கொண்டு வருகையில் இருவரும் படகுடன் கைது செய்யப்பட்டனர் என்று விசாரணையில் தெரிய வந்தது. (உ-எ-150)

சிங்கள எழுத்தாளருக்கு நாளை அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 29

தமிழ் எழுத்தாளர் மீது தனி அபிமானம் கொண்ட சிங்கள எழுத்தாளரான திரு. கே. ஜி அமரதாஸவின் மறைவுக்கு அஞ்சலி செய்யுமுகமாக நாளை கூட்டம் ஒன்றை 'மல்லிகைப் பந்தல்' டொமினிக் ஜீவா ஒழுங்கு செய்துள்ளார்.

இக்கூட்டம் பூபாலசிங்கம் ஸ்டோர் மண்டபத்தில் (நகுலினி) பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

பேராசிரியர் கே சிவஞானசுந்தரம் (நந்தி) கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார். (உ-எ)

இந்திய---

(1-ம பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தலைவர் ஒருவரும் விடுதலை அமைப்பு ஒன்றுக்குத் தான் வழங்கி வந்த ஆதரவை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டார் என்றும் சென்னை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன:

சம்பந்தப்பட்ட அரசியல் தலைவரே தமது முடிவைச் சம்பந்தப்பட்ட அமைப்புக்கு நேரடியாகத் தெரிவித்துவிட்டார் என்றும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

சிவ்சங்கர் வந்தபின்

கடந்த சனிக்கிழமை இந்திய வெளியுற அமைச்சர் பி. சிவ்சங்கர் தமிழக முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரனைச் சந்தித்தார்.

அதனைத் தொடர்ந்தே, சென்னையில் இத்திருப்பங்கள் ஏற்பட்டன என்று கூறப்படுகின்றது.

தமிழ் மொழிப் பிராந்தியம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற அடிப்படையிலான தீர்வைக் கொண்டு வரவே இந்தியா இந்த நிர்ப்பந்த அணுகு முறையைக் கையாளத் தொடங்கி உள்ளது என்றும் புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன .(அ-எ)

250 அன்னை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

உள்ள படையினர் இக்கிராமங்களுக்குச் சென்று இளைஞர்களைக் கைது செய்கின்றனர்; சித்திரவதை செய்துவிட்டு விடுதலை செய்கின்றனர். பெண்களை அவமரியாதையாக நடத்துகின்றனர்.

இந்த அநியாயங்களில் இருந்து எமக்குப் பாதுகாப்பு வழங்குங்கள்; அகதி முகாம் ஒன்றில் தஞ்சமளியுங்கள்— இப்படி அன்னையர் திரு. எம். அந்தோனிமுத்துவிடம் எடுத்துச் சொன்னார்கள்.

உடனடியாக முடிவு தெரிவிக்கப்படவேண்டும்! இல்லையேல் சத்தியாக்கிரகம் செய்வோம்-- இப்படி அன்னையர் வலியுறுத்தினர்.

இதுபற்றி நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் உறுதியளித்தார்.

ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்புப் பிரஜைகள் குழுவையும் சந்தித்து அன்னையர் முறையிட்டனர். (இ-எ-81)

மகாநாயக்கர் ஜனாதிபதியை சந்திக்கிறார்

கொழும்பு, ஜூலை 29

மல்வத்தை பீடாதிபதி ஆனந்த மகாநாயக்க தேரர் இன்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார்.

மாகாண சபை யோசனைகள் சம்பந்தமாக இப்பேச்சுக்கள் இடம்பெறும்

மாகாணசபை யோசனைகள் குறித்து மல்வத்தைப் பீடாதிபதி இன்னும் முடிவு எதுவும் எடுக்கவில்லை என்பது தெரிந்ததே. (இ-எ)

பேய்ச்சியம்பாள் வருடாந்த மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ் - நாயன்மார்கட்டு அருள்மிகு இராஜ இராஜேஸ்வரி பேய்ச்சியம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகிறது.

இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவு பெறும்.

9 ஆம் திகதி சனிக்கிழமை 12 மணிக்கு அன்னப்பிரஸேசமும் அன்னதானமும் வழங்கப்படும் (உ-10)

சயனைட் அருந்தி மரணம்

கல்முனை, ஜூலை 29

கடந்த சனிக்கிழமை பாண்டிருப்புப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடத்திய சமயம் கைதான மூன்று இளைஞர்களுள் ஒருவர் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இறந்த இளைஞனின் சடலத்தையும் எடுத்துக் கொண்டு மற்ற 2 இளைஞர்களையும் விசாரணைக்காக படையினர் அழைத்துச் சென்றனர். (உ-எ-84)

தன்னைத் தானே சுட்ட ஊர்காவலர்

திருகோணமலை, ஜூலை 29

முதலிக்குளத்தில் நேற்றுப் பகல் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் தனக்கு வழங்கப்பட்ட துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இறந்தவரின் பெயர் எஸ். ஜ அந்தலா, வயது 22. (இ-எ-150)

150க்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் மூழ்கும் நிலை பல இடங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இப்படி மின்சார அதி [illegible] தார். (இ-எ-6)

விளையாட்டரங்கு

15 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டம்

ஹென்றிஸ் சாம்பியன் யாழ் இந்து சோபிக்கவில்லை

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம் ஜூலை 29

வடமாநிலக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 15 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இளவாலை சென் ஹென்றீஸ் அணி சாம்பியனானது.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் சென்: ஹென்றிஸ் அணி யாழ் இந்துக் கல்லூரி அணியை 2:0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது.

இந்த ஆட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நேற்றைய ஆட்டத்தில் யாழ் இந்து அணியினால் சோபிக்க முடியவில்லை. முற்றும் முழுதாக சென். ஹென்றீஸ் அணியின் கையே ஆட்டத்தில் ஓங்கியிருந்தது.

சென் ஹென்றீஸ் பெற்ற இரண்டு கோல்களில் ஒன்று 'பெனால்டி' உதைமூலம் கிடைத்தது

இந்த ஆட்டத்திற்கு திரு. கே பரமேஸ்வரலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

போட்டிக்கான ஏற்பாடுகளை வட்டாரக் கல்வியதிகாரி (உடற் கல்வி) திரு வி கணேசலிங்கம் செய்திருந்தார்

பிரதம கல்வியதிகாரி திரு. வி தம்பராசா தலைமையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பிரதம கல்வியதிகாரி திரு கே. சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (உ-7)

இன்று இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவு பாடசாலை உதைபந்தாட்ட அணிகளுக்கிடையேயான சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று இடம்பெறும்

இந்த இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் மகா வித்தியாலய அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதுகின்றன.

யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டி மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். (உ-7)

இந்துவுக்கு 172 ஓட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையேயான 17 வயதுப் பிரிவுக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் நேற்றைய ஆட்ட நேரமுடிவின் போது யாழ் இந்துக் கல்லூரி 7 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்று முன்னணியில் நின்றது.

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு எதிரான இந்த இறுதிப் போட்டி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமானபோது யாழ் இந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது

டி. கே. புவனேந்திரன் கே. எஸ். ரவிக்குமார் பி. பிரபானந்தன் ஆகியோர் முறையே 58, 41, 33 ஓட்டங்களைப் பெற்றனர். (உ-7)

சென்ற வாரம் குழம்பிய

உதைபந்து போட்டியை மீண்டும் நடத்த முடிவு

ஆனால் பார்வையாளர் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 29

சென்ற 22ஆம் திகதி கைகலப்பில் முடிவுற்ற உதைபந்தாட்டப் போட்டி மீண்டும் நடைபெறும்.

கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற மாநாட்டில் இதுபற்றி தீர்மானிக்கப் பட்டது.

யாழ். இந்துக்கல்லூரிக்கும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான 19 வயதுக் குட்பட்டோர் பிரிவுக்கான ஆட்டமே சென்ற வாரம் குழம்பியது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் கல்வித் திணைக்களத்தாலேயே நடத்தப்பட்டன.

இது சம்பந்தமாக கல்வித் திணைக்களத்தில் கூட்டம் ஒன்று கல்விப் பணிப்பாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் இக்கல்லூரிகளின் அதிபர்களும் கல்வி அதிகாரிகள் திரு. கு. சோமசுந்தரம், திரு கே கந்தசாமி, திரு வி. தங்கராஜா, உடற்கல்வி வட்டாரக் கல்வியதிகாரி திரு வி. கணேசலிங்கம், நல்லூர், காங்கேசன் துறை வட்டாரக் கல்வியதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:

ஆட்டம் மீண்டும் அதே மைதானத்தில் நடைபெற வேண்டும்.

சென்ற தடவை கடமையாற்றிய நடுவர்களே மீண்டும் கடமையாற்ற வேண்டும்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

வெளியார்களை பார்வையாளர்களாக அனுமதிக்கக்கூடாது. (இ-உ-5)

பாண்டிருப்பு

இந்து வித்தியாலய மாணவர் பகிஷ்கரிப்பு

கல்முனை. ஜூலை 29

இரண்டு தமிழ் மாணவர்கள், ஆசிரியர் ஒருவர் ஆகியோரை பொலிஸ் கமாண்டோக்கள் கைது செய்ததை ஆட்சேபித்து பாண்டிருப்பு இந்துமகா வித்தியாலயத்தின் மாணவர்கள் நேற்றுத் தொடக்கம் பகிஷ்கரிப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர்.

இம் மகாவித்தியாலயத்தில் சுமார் 800 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

வி சிவசுப்பிரமணியம், ந விமலதாசன் ஆகிய உயர்தர வகுப்பு மாணவர்களும் திரு. மு. புவனேந்திரராஜா என்ற ஆசிரியருமே கைது செய்யப்பட்டவர்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும் வரை பகிஷ்கரிப்பு தொடரும் என்று சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. (இ-எ-84)

படகு கவிழ்ந்தது 18பயணிகள் 'அருந்தப்பு'

யாழ்ப்பாணம், ஜூலை 29

அல்லைப்பிட்டியிலிருந்து நாவாந்துறைக்கு மீன்பிடிப்படகு ஒன்றில் சென்ற 18 பிரயாணிகள் படகு கவிழ்ந்ததால் நடுக்கடலில் மூழ்கி தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை பண்ணை பரப்புக் கடற்பகுதியில் நடந்தது.

அராலித்துறையூடாக யாழ்ப்பாணம் வருவதற்கு அதிகநேரம், பணம் செலவாகும் என்று கருதியதால் இவர்கள் மீன்பிடிப் படகில் நாவாந்துறை நோக்கி வந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்கள் வந்தபடகு கவிழ்ந்ததைக் கண்ட வேறு படகுகளில் வந்தவர்கள் விரைந்து சென்று அவர்களைக் காப்பாற்றினர்.

படகில் இருந்த மீனும் பயணிகள் கொண்டுவந்த பொருள்களும் நீரில் மூழ்கி நாசமாயின. (உ)

திருமலையில் அமெரிக்க டெலிவிஷன் குழு

திருகோணமலை, ஜூலை 29

அமெரிக்கடெலிவிஷன் கம்பனிக்குழு ஒன்று கடந்த சனிக்கிழமை திருகோணமலைக்கு விஜயம் செய்தது

வன்செயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அக்குழு படம் எடுத்தது. (உ-எ-150)

சிங்களப் பெண் சுட்டுக் கொலை

திருகோணமலை, ஜூலை. 29

தம்பலகாமத்துக்கு அருகிலுள்ள கல்மெட்டியாவ குடியேற்றத் திட்டத்தில் சிங்களப் பெண் ஒருவர் இனந்தெரியாதோர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்

பதில் நீதவான் திரு. எம் கே. செல்வராசா கொலை என்று தீர்ப்பு அளித்தார்.

இறந்த பெண்ணின் பெயர் நிஸ்ஸமெனிகா, வயது 45. (இ-எ-150)

பாகிஸ்தானில்

பாகிஸ்தானில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அவாமி தேசியக் கட்சியின் தலைவர் கான் அப்துல் வலிகான் தமது நாட்டு அரசின் வெளியுறவுக் கொள்கையை குறை கூறியுள்ளார் (இ-ஏ)